# என்.ஜி.எம். கல்லூரி

பொள்ளாச்சி

# உலகளாவிய விழுமியங்கள்



## மனிதவள மாண்புத் துறை

# பொருளடக்கம்

1. இனப்பாகுபாடும் தீர்வும் ... 7

2. சுற்றுச்சூழல் பாதிப்பும் அதன் தீர்வும் ... 13

3. அரசியல் கொந்தளிப்பும் தீர்வும் ... 22

4. உலகை அச்சுறுத்தும் தீவிரவாதமும் தீர்வும் ... 26

5. கலாச்சார சீரழிவும் தீர்வும் ... 32

6. ஒருமித்த கலாச்சார விளைவும் தீர்வும் ... 38

7. பொருளாதாரப் பாகுபாடுகளும் தீர்வுகளும் ... 47

8. செயலும் மனிதனே தீர்வும் மனிதனே ... 54

9. தவம் ... 58

10. முத்திரைப் பயிற்சிகள் ... 62

# 3. அரசியல் கொந்தளிப்பும் தீர்வும்

முனைவர் **ரெ. முத்துக்குமரன்**
முதன்மையர்
வரலாற்றுத்துறை தலைவர்
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி

''தண்ணீர் விட் டோவளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம் ; கருகத் திருவுளமோ?'' - பாரதியார்.

**முன்னுரை**

1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள், இந்தியாவில் ஆங்கில ஆட்சியை அகற்றிய நாள். மன்னராட்சி என்பதனை ஒழித்து, மக்களாட்சியை மலரச் செய்து மக்களாகிய நாமே நம் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை கொடுத்த சுதந்திர நாள் அது. இந்த நாளுக்காகத் தான் அன்றைய 30 கோடி இந்திய மக்களும் தங்கள் குடும்பங்களை மறந்து போராடினர். ஆயிரக்கணக்கானோர் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். இத்தனை தியாகங்களையும் அவர்கள் செய்தது தங்களுக்காகவோ, தங்கள் குடும்பத்தினருக்காகவோ அல்ல. அவர்கள் சந்ததியினரான நாமாவது சுதந்திர இந்தியாவில் வளமுடன் வாழ வேண்டும் என்பதற்காகத்தான்.

சுதந்திரமும் சுயநலமும் கைகோர்த்துக் கொண்டால் விடைபெறுவது பொறுப்புணர்வு. அரங்கேற்றுவது அராஜகம், அமளி குழப்பம். ஜனநாயகத்தின் நான்கு தூண்களாகக் கருதப்படுகின்ற நாடாளுமன்றம், நிர்வாக இயந்திரம், நீதித்துறை, ஊடகங்கள் ஆகியவை தங்கள் பணியிலிருந்து விலகிச் செல்வதன் காரணமாக அரசியல் கொந்தளிப்புகள் ஏற்படுகின்றன.

**நாடாளுமன்றம்**

அரசு அல்லது தனி நபர்கள் முன்வைக்கிற சட்ட முன் வடிவுகளை மக்கள் பிரதிநிதிகள் விவாதித்து முடிவெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அவைதான் நாடாளுமன்றம், இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் பல்வேறு மாநிலங்கள், கலாச்சாரங்கள், அரசியல் மற்றும் பொருளாதாரப் பின்னணியிலிருந்து வரும் மக்கள் பிரதிநிதிகள் அறிவுப் பூர்வமாக விவாதித்தால் ஒரு சட்டமுன் வரைவு பல கோணங்களில் பார்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஆனால் நாடாளுமன்றத்தில் பல சட்டங்கள் விவாதிக்கப்படாமலேயே நிறைவேற்றப்படுகின்ற சூழ்நிலைதான் இன்று நிலவுகிறது.

சட்ட முன்வடிவுகள் மட்டுமல்ல, பல்வேறு அரசுத் துறைகளுக்குச் செலவிடப்படும் நிதி பற்றிக் கூடக் கேள்விகளோ, விவாதங்களோ இல்லாமல் நம் மக்கள் பிரதிநிதிகளால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.

அமளி, கூச்சல், குழப்பம் காரணமாக நாடாளுமன்றம் முடக்கப்படும் போதெல்லாம் நம்முடைய வரிப்பணம் எக்கசக்கமாக வீணாகிறது. ஒரு நாள் நாடாளுமன்றப் பணிகள் முடங்கினால், நாட்டிற்கு ஏற்படும் செலவு 1.23 கோடி ரூபாய்கள், நாடாளுமன்றத்தை நடத்த ஆகும் செலவு ஒரு நிமிடத்திற்கு ரூ. 23,083. இத்தனை செலவில் நடக்கும் நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் பொறுப்புணர்வோடு நடந்து கொள்கிறார்களா? என்றால் இல்லை என்ற பதிலே கிடைக்கிறது.

## நிர்வாக இயந்திரம்

சவாலான நேரங்களில் சுனாமி, தேர்தல், லட்சக்கணக்கானோர் கூடும் திருவிழாக்கள், மாநாடுகள், போன்றவற்றில் நிர்வாகம் தகுந்த திறமையோடு செயல்படுவதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். இந்தியாவின் 'ஸ்டீல் ஃபிரேம்'என்று வர்ணிக்கப்பட்ட இந்திய சிவில் சர்வீசை, இன்று அரசியல் வாதிகள் தங்கள் கைக்குள் வைத்துக் கொண்டு நிர்வாகத்தை சீர்குலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அறிவாற்றலும் உழைப்பும் கொண்ட இளைஞர்கள் இந்தப் பணிகளுக்குக் கடுமையாக போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்தப் புத்திக் கூர்மையும், உழைப்பும், லட்சிய வேகமும் இளமையும் அரசியல்வாதிகளின் சுயநலத்திற்குப் பலியாகி விடுகின்றன, கடமையும் பொறுப்பும் மிக்க இளைஞர்கள் அரசியலுக்கு வந்து நிர்வாக இயந்திரத்தை சிறப்புடன் செயல் படுத்த வேண்டும்.

## நீதித்துறை

உச்சநீதி மன்றத்தில் CBI ஓர் அறிக்கை தாக்கல் செய்தது. ஓய்வு பெற்ற ஓர் உச்சநீதிமன்ற நீதிபதி, அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் 7 நீதிபதிகள் உள்பட 23 நீதிபதிகள் கடைநிலை ஊழியர்களின் பிராவிடன்ட் பண்ட் கணக்கிலிருந்து ரூ. 6.58 கோடி மோசடியாகப் பணம் எடுத்ததாகப் புகார் தெரிவித்தது. ஆனால் போதுமான ஆதாரங்கள் இல்லை எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்து விட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஒரே நபரான ஆசுதோஷ் ஆஸ்தானா என்ற நீதிமன்ற ஊழியர், சிறையில் மர்மமான முறையில் இறந்து போனார். அவர் தான் இந்த ஊழலின் மூளை, அவருக்குத்தான் முழு விபரமும் தெரியும் எனப் பத்திரிக்கைகள் எழுதின.

நீதித்துறையிலிருந்து கசியும் ஊழல்கள் கவலை தருகின்றன. ஆனால் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கை பயமுறுத்துகிறது. இந்தியக் கீழ்நிலை நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் கிரிமினல் வழக்குகள் சுமார் 1.32 கோடி. இப்போதுள்ள வேகத்தில் இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டால், அவை முடிவுக்கு வர 300 ஆண்டுகள் ஆகும்.

**ஊடகங்கள்**

ஒரு சாதாரண இந்தியன், எம்.பி.க்களை எளிதில் அணுக முடியாது. அதிகாரிகளை அத்தனை சுலபமாக பார்த்துவிட முடியாது. நீதிபதிகளை நெருங்க முடியாது. ஆனால் அவன் அதிகச் சிரமமில்லாமல் அணுகக் கூடிய இடம் ஊடகங்கள். இந்திய ஊடகங்கள் அதிகாரத்தில் இருப்பவர்களின் தவறுகளை அம்பலப்படுத்தி, அவர்கள் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட க் காரணமாயிருந்திருக்கின்றன. குற்றவாளிகள் தண்டிக்கப்படக் காரணமாயிருந்திருக்கின்றன. அனால் இன்று ஊடகங்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டே அவை நீதிமன்றகளைப் போல வழக்கு நடத்தித் தீர்ப்பெழுதுகின்றன என்பது தான்.

மற்ற மூன்று தூண்கள் அளவிற்கு இல்லை என்றாலும் இந்த நான்காவது தூணும் மக்களின் நம்பிக்கையை இழந்து வருகிறது. வாழ்க்கை முன்னேற்றத்திற்கு எந்த வகையிலும் பயன்தராத செய்திகளுக்குச் சுவாரஸ்யம் என்ற பெயரில் முக்கியத்துவம், ஆக்கபூர்வமான செயல்கள் குறித்து அலட்சியம் என்ற அணுகுமுறை ஊடகங்கள் மீதான நம்பகத்தன்மையை தூக்கி எறிந்து விட்டன.

தொலைக்காட்சிகள் தலையெடுத்தபிறகு, திரைப்படங்களைத் தீனியாகத் தருவதே ஊடகங்களின் ஒரே வேலை என்றாகிவிட்டது. சுதந்திர தினச் சிறப்பு நிகழ்ச்சிகளில் கூட, சினிமா நட்சத்திரங்களைத் தான் முன்னிறுத்துகிறது. நம்முடைய நெடிய வரலாறு, கலை, கல்வி, அறிவியல், சுற்றுலாத்தலங்கள், இலக்கியம், திரைப்படம் சாராத இசை, உடல் நலம், ஆன்மீகம் எல்லாம் ஒதுக்கப்பட்டு ஓரம் கட்டப்பட்டு விட்டன. ஊடகங்கள் தகவல் சாதனங்கள் என்ற தகுதியை இழந்து வணிகப் பொருட்களாக வடிவம் மாறிவிட்டன.

சுதந்திர இந்தியாவின் மணி மகுடங்களாகத் திகழ்ந்திருக்க வேண்டிய இந்த நான்கும் முள் முடிகளாக மாறிப் போனது ஏன்? . அது சுயநலம். சுதந்திரம் சுயநலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட விபரீதத்தின் விளைவுகளைத் தான் நாடு நான்கு துறைகளில் மட்டுமல்ல, அனைத்து துறையிலும் கண்டு கொண்டிருக்கிறது. சுயநலனைத் துறக்காத எந்த சுதந்திரமும் இனிக்காது.

## தீர்வுகள் :

''நாம் என்ன செய்ய முடியும்? இவையெல்லாம் அரசாங்கத்தின் வேலைகள்'' என்று கூறி நாம் தப்பிக்க நினைக்காமல் நாம் தான் அரசாங்கம் என்பதை நெஞ்சில் நிறுத்த வேண்டும். மாற்றம் என்பது மக்களில் துவங்குவது என்பதை மனதில் பதிவு செய்ய வேண்டும்.

அமெரிக்க அதிபர் ஒபாமா. அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட பொழுது கூறிய முழக்கமே, 'ஆம், நம்மால் மாற்ற முடியும்' என்பது தான். ஆனால், அவருக்கு முன் மாதிரியாக இருந்தவர் '' மாற்ற முடியும்'' என நம்பவைத்தவர் மகாத்மா தான் என்று அவரே கூறியுள்ளார். மேலும் 50 ஆப்பிரிக்க நாடுகளின் இளம் தலைவர்கள் அமைப்பில் பேசிய பொழுது அதையே வலியுறுத்தும் விதமாக, 'நீ முதலில் மாற வேண்டும்' என்ற மகாத்மாவின் பொன்மொழியைச் சுட்டிக்காட்டி அந்த இளந்தலைவர்களை, தன்னலமின்றி பொறுப்பேற்றுச் சமுதாய அக்கறையுடன் செயல்பட அறிவுறுத்தினர். இந்தியன் என்ற நம்மை பெருமையடைய வைப்பது அவரது அறவழி நெறிமுறைகளின் அழியாத புகழையே காட்டுகிறது.

வேதாத்திரியத்தில் அரசியலைப் பற்றி கூறும் போது

'' அரசியலும், வாணிபமும் மக்கள் தம்மை
அடக்கிடவும், உறிஞ்சிடவும், ஏற்றதாச்சு
அரசியலே இவ்விரண்டில் முதன்மை என்று
அறிந்திட்டார் சிலர். அதனால் திட்ட மிட்டு,
அரசியலைத் தந்திரத்தால், ஒழுங்கீனத்தால்
அடையமுயல் கின்றார்கள், போட்டி யிட்டு,
அரசியலே முரடர்களின் சொத்தாய் மாறும்
அவலநிலை யைமுதலில் மாற்ற வேண்டும்'' - வேதாத்திரி மகரிஷி

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு - குறள் (740)

நல்ல அரசனைப் பெறாத நாடு எல்லா வளங்களையும் பெற்றிருந்தாலும் அவற்றால் பயன் இல்லாமல் போய்விடும்.



"If there be righteousness in the heart,
There will be beauty in the character,
If there is beauty in the character,
There will be harmony in the home,
If there be harmony in the home,
There will be order in the nation,
If there is order in the nation,
There will be peace in the world"

Dr. APJ Abdul Kalam

ISBN 978-93-87009-32-5

என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி